<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 111/2021 நாள்: 15.04.2026 வா.சா.1– ஹர்சினி**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>**

எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே தொண்டமுத்தூரை சேர்ந்த தங்கவேல் என்பவர் மூலமாக திருமணம் நடந்தது என்று சொன்னால் சரிதான். முதன்முதலில் பிரதிவாதி என்னை கோவிலில் வைத்து பெண் பார்க்கும் போது, தாட்சாயிணி அம்மன் கோவிலில் இருந்த தாலியை கோவில் சாமியார் எடுத்து எனது கழுத்தில் போட்டார் என்றால் சரியல்ல, கோவில் சாமியார் சிலையில் இருந்து எனது கணவரிடம் எடுத்து கொடுத்த பிறகு, எனது கணவர் தான் மேற்படி தாலியை என் கழுத்தில் கட்டினார் என்று சாட்சி கூறுகிறார். அந்த சமயத்தில் நானும், எனது தாயாரும் பிரதிவாதியிடம் கரூரில் 2 வீடுகள் இருப்பதாகவும், கோயமுத்தூரில் ஒரு அப்பார்ட் மெண்ட் இருப்பதாகவும், நான் வெளிநாடு சென்று சம்பாதித்து, பணம், நகை வைத்திருப்பதாகவும் தெரிவித்தோம் என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு இருவீட்டாரும் முறைப்படி பேசி, காங்கேயம் காடையூர் காடைஈஸ்வரர் கோவிலில் வைத்து, எனக்கும், பிரதிவாதிக்கும், திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு மற்றும் ஜவுளி எங்களுக்கு எடுப்பதற்கு பிரதிவாதி மொத்தம் ரூ.10 லட்சம் செலவு செய்தார் என்றால் சரியல்ல. எனது தாயார் எனக்கு திருமணத்தின் போது 80 பவுன் நகையும், பிரதிவாதிக்கு தங்க நகையும், அணிவித்தார் என்று நான் சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்த பிறகு பிரதிவாதியின் கிராமத்தில் பிரதிவாதியின் தாயாருடன் நான் கூட்டுக் குடும்பமாக குடும்பம் நடத்தினேன்

என்றால் சரிதான். திருமணம் ஆன 1மாதத்திலேயே தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என்று, நான் பிரதிவாதியை வலியுறுத்தி உடுமலைப்பேட்டை Sriram நகரில் தனிக்குடித்தனம் நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. உடுமலைப்பேட்டை Sriram நகரில் தனிக்குடித்தனமாக நான் வசிக்கவில்லை. திருமணம் ஆகி குழந்தை பிறப்பதற்கு முன்பு தனிக்குடித்தனமாக வசிக்கவில்லை. குழந்தை பிறந்த பிறகு நானும், எனது கணவரும் உடுமலைப்பேட்டை Sriram நகரில் தனிக்குடித்தனமாக வசித்து வந்தோம் என்றும், பின்னிட்டு காந்தி நகரில் தனிக்குடித்தனம் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் தனிக்குடித்தமாக வசித்த போது எனது தாயாரை உடன் வைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல எனது தாயார் இருந்த வீட்டில் தான் நானும், எனது கணவரும் சேர்ந்து வசித்து வந்தோம் என்று சாட்சி கூறுகிறார். திருமணம் ஆன பிறகு, 1 மாதம் கழித்து நானும், எனது கணவரும் எனது தாயாரும் ஒன்றாக உடுமலைப்பேட்டையில் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல, எனது தாயாரும் நானும் ஒன்றாக வசித்து வந்தோம், எனது கணவர் அவ்வப்போது வந்து செல்வார் என்று சாட்சி கூறுகிறார். தற்போது சாட்சி எனது தாயார் வசித்து வந்த வீட்டில் நான் மருத்துவ சிகிச்சைக்கு வரும் போது நானும், எனது கணவரும் எனது தாயார் வீட்டில் அவ்வப்போது வசித்து வந்தோம். அப்போது நாங்கள் பணத்தம்பட்டியில் தான் வசித்து வந்தோம். பணத்தம்பட்டியில் நானும், எனது கணவரும் கூட்டுக்குடும்பமாக 4 மாதங்கள் ஒன்றாக வசித்து வந்தோம். பணத்தம்பட்டியில் நானும், எனது கணவரும் தனிக்குடும்பமாக வசிக்கவில்லை. பிரதிவாதி உடுமலைப்பேட்டையில் வீடு வாடகைக்கு எடுத்து 3 வேலையாட்களுடன் என்னை தனிக்குடித்தனம் வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உடன்பிறந்த ஒரு அக்கா, ஒரு தம்பி உண்டு என்று சொன்னால் சரிதான். எங்கள் குடும்பத்துக்குள் சொத்து பிரச்சனை ஏற்பட்டு, எனது தம்பி

திருமணம் செய்து கொண்டு, தனிக்குடித்தனம் சென்று விட்டார் என்றால் சரியல்ல. எனது தம்பி எனது தாயாருக்கும் எனக்கும், ஒரு சொத்து ஒதுக்கினார் என்றால் சரியல்ல, எனது தாயாருக்கு தான் ஒதுக்கினார் என்று,

சாட்சி கூறுகிறார். மேற்படி சொத்தை நானும், எனது தாயாரும், விற்றுவிட்டோம் என்றால் சரியல்ல, எனது தாயார் மேற்படி சொத்தை எனக்கு எழுதி வைத்த பிறகு நானும், எனது கணவரும், சேர்ந்து விற்பனை செய்தோம் என்று சாட்சி கூறுகிறார். நானும், எனது தாயாரும் சேர்ந்து HM Polimer என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை நடத்தி வந்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை பிரதிவாதி அவருடைய எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான், அதை நான் மறுத்துள்ளேன். மேற்படி நிறுவனத்திற்காக பிரதிவாதி கோயமுத்தூர் Axis Bank ல் ரூ.40 லட்சமும், உடுமலைப்பேட்டை யூகோ வங்கியில் ரூ.20 லட்சமும் கடன் வாங்கி எங்களிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி HM Polimer நிறுவனத்தை நடத்தியதில் எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு, மேற்படி நிறுவனத்தை நான் மூடிவிட்டேன் என்றால் சரியல்ல. மேலும் பிரதிவாதி அவருடைய நகைகளை எனது பெயரிலும், எனது தாயார் பெயரிலும் அடமானம் வைத்து, எங்களுக்கு பணம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அவருடைய தாயார், மற்றும் அவருடைய சகோதரி நகைகளை அவர் பெயரிலும், அவருடைய தாயார் பெயரிலும் அடமானம் வைத்து எங்களுக்கு பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நானும், எனது தாயாரும் பிரதிவாதி பெயரிலுள்ள சொத்துக்களை என் பெயருக்கு எழுதி தர வேண்டும் என்று, பிரதிவாதியை வலியுறுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அவர் பெயரிலுள்ள சொத்துக்களை எழுதி தர மறுத்ததால் நான் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதி 1வது வாதியை சாந்தி மாண்டிசோரி பள்ளியில் படிக்க வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதியுடன் சண்டையிட்டுக்

கொண்டு, பிரதிவாதியின் அனுமதி இல்லாமல் நான் 1வது வாதியை சீனிவாச பள்ளியில் சேர்த்து விட்டேன் என்றால் சரியல்ல, அவருடைய அனுமதியுடன் தான் சேர்த்தேன். மேற்படி பிரச்சனைக்காக எனக்கும் பிரதிவாதிக்குமிடையே தங்கராஜ், ஜி.பி.ராஜேந்திரன், மனோகரன் ஆகியோர்கள் பைசல் பேசினார்கள் என்றால் சரிதான், குமார் என்பவரும் பேசினார் என்று சாட்சி கூறுகிறார். மேற்படி நபர்கள் எங்கள் இருவரையும், சேர்ந்து வாழும் படி அறிவுரை கூறினார்கள் என்றால் சரிதான். நான் சேர்ந்து வாழ மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல, பிரதிவாதி சேர்ந்து வாழ மறுத்து விட்டார் என்று சாட்சி கூறுகிறார். அதன்பிறகு தாவா சொத்தில் பாகம் கேட்டும், ஜீவனாம்சம் கேட்டும், வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி சேர்ந்து வாழ உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மனு விசாரணையில் நான் சாட்சியம் அளிக்கும் போது நான் சேர்ந்து வாழ மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள HMOP.No. 230/2022 வழக்கில் நான் சேர்ந்து வாழ தயார் என்று வாதம் செய்கிறேனா என்றால் சாட்சி என்னை நல்ல படியாக பிரதிவாதி கவனிக்கும் பட்சத்தில் நான் சேர்ந்து வாழ தயார் என்று கூறியுள்ளேன். இந்த வழக்கி தாக்கல் செய்ததிலிருந்து மைனர் வாதியை பிரதிவாதி பார்க்க அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி மைனர் வாதியை பார்க்க அனுமதி கேட்டு மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப் பட்ட பிறகும், மைனர் வாதி குழந்தையை பிரதிவாதியை பார்க்க நான் அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது பிரதிவாதி என்னோடும், மைனர் வாதியோடும், சேர்ந்து வாழ தயாராக இருக்கும்பட்சத்தில் நான் சேர்ந்து வாழ தயாரா என்றால் சாட்சி தயார் என்று கூறுகிறார்.

பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி என்னை அழைத்து சென்றால், நான் அவருடன் சேர்ந்து வாழ செல்ல தயாரா என்றால் சாட்சி தயார் என்று கூறுகிறார்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.15 17:20:15 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.